"கேடில் விழுச்செல்வம் கல்வி'' என்றார் திருவள்ளுவர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்பே கல்வியை வலியுறுத்தி தன்னுடைய படைப்பில் ஓர் அதிகாரத்தை எழுதினார்.

அதன் பிறகு கிட்டத்தட்ட பதினெட்டு நூற்றாண்டுகள் கழிந்த நிலையில் கல்வி உரிமைக்கான முழுக்கங்கள் எழுப்பப்பட்டன, போராட்டங்கள் நடத்தப்பட்டன என்றால் வள்ளுவன் காலத்திலேயே கல்விக்கான தடைகள் தொடங்கி விட்டன. ஒரு புலவன் தன்னுடைய சமகால நிகழ்வுகளை வரலாறாக்கிடும் பெரு முயற்சியில் பாடல் பாடியிருக்கிறான். அப்படியும், யாரும் அதைப் புரிந்து கொண்டு போராட முன்வரவில்லை என்பதால்தான் வள்ளுவருக்குப் பிறகு கிட்டத்தட்ட 1700 ஆண்டுகள் பின்னால் வந்த அய்ரோப்பியர்கள் காலம் வரை இந்த மண்ணில் கல்வி தடுக்கப்பட்டு, மறுக்கப்பட்டு வந்திருக்கிறது.

அய்ரோப்பிய மண்ணிலிருந்து சமயப் பரப்புரைக்காக உலகெங்கும் சமயச் சான்றோர்கள் கிளம்பிய பொழுதுதான், இந்தியத் துணைக் கண்டத்தின் இருள் சூழ்ந்த வாழ்க்கை நிலை வெளியுலகத்திற்குத் தெரியவந்தது.

ஒரு பெரும் மக்கள் கூட்டம், உழைக்கும் மக்கள் கூட்டம் மூளையில் விலங்கிடப்பட்டு, சமுதாயத்தின் ஒரு மூலையில் முடக்கப்பட்டிருக்கிறதே என்று கவலைப்பட்ட அய்ரோப்பியப் பாதிரிமார்கள் தமிழ் மண்ணில் சமயப் பரப்புரைக்கும் முன் தமிழ் படிக்கவும், தமிழரைப் படிப்பிக்கவும் முடிவு செய்து



# எலினா என்றொரு நந்தா விளக்கு!

கல்விப் பணியைத் தொடங்கினார்கள்.

அன்று தொடங்கி இன்று வரை கற்பிக்கும் தாக்கம் அய்ரோப்பியர்களிடையே இன்னமும் அதன் தட்பவெப்பம் மாறாமல் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பதற்கு நிகழ்கால உதாரணம்தான் "கியூமோ பவுண்டேசன்''.

உலகில் உள்ள பிராணிகளில் ஒன்றுதான் மனித இனம். மனிதன் மற்ற விலங்குகளில் இருந்து மாறுபடுவது பகுத்தறிவில். பகுத்தறிவு என்பதே கற்றுக் கொள்வதும், கற்றுக் கொடுப்பதும்தான்.

உலகத்தில் மூத்த இனம், மூத்த மொழி என்கிற பெருமையெல்லாம் நமக்கு உண்டு என்றாலுங்கூட "கற்றுக் கொள்ளுதல்-கற்றுக் கொடுத்தல்'' என்கிற மனிதப் பண்பில் உலகளவில் முன்னணியில் நிற்பவர்கள் அய்ரோப்பிய மக்களே என்றால் அது மிகையான பாராட்டல்ல.

ஏன், இண்டாயிரமாண்டு இருள் விலக்கி தமிழ் மண்ணில் அறிவு ஒளி பாய்ச்சியவர்களே அவர்கள் தானே. நமக்கான அறிவுக்கதிரவன் உதித்தது என்னமோ மேற்கு திசைதான்.

இரண்டாம் உலகயுத்தம் உலகத்தின் பல்வேறு சமூக-அரசியல் மாற்றங்களைக் கொடுத்தது. அந்த யுத்தக் களத்தில் தன் தந்தையோடு சிறை பிடிக்கப்பட்டுப் பின் தப்பித்த பதின் பருவத்துப் பெண் மரியாரோசன்.

இத்தாலிய நாட்டு விமானப் படையில் பணியாற்றிய சிசிலி நாட்டு இளம் விமானி ஃப்ரான்சிஸ்கோவும் மரியாரோசனும் முதல் சந்திப்பிலேயே காதல் வயப்பட்டு வாழ்வில் இணைந்தனர். போர்க்களத்தில் இணைந்த மரியாரோசன் ஃப்ரான்சிஸ் இணையரின் நான்கு மகள்களில் நான்காவது மகள்தான் லேனா.

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னான அய்ரோப்பிய மக்களின் வாழ்வானது பல்வேறு படிப்பினைகளைக் கொண்டதாக அமைந்தது.

**மக்களின் இழிநிலை துடைக்க என்ன செய்வது? என்ற அந்தச் சிந்தனையின் விளைவுதான் "கியூமோ பவுண்டேசன்" பிறக்கக் காரணமானது. இது மனிதாபிமானத்தின் அடையாளம். மனிதநேயத்தின் செயல் வடிவம். ❞**



தனது கணவர் திரு.ஆல்பிரடோ கியூமோவுடன் திருமதி.எலினா கியூமோ.

தனது பெற்றோரின் போர்க்கால அனுபவங்கள், உலகளாவிய பல்வேறான மக்களின் வாழ்க்கை முறைகள், மாற்றங்கள் என இளம் வயது லேனாவுக்கு நல்லதொரு அனுபவக் கல்வி கிடைத்தது.

இது, தேடலையும், பொது அறிவையும் லேனாவின் உள்ளத்தில் விதைத்தது. தனது விசாலப் பார்வையை இந்த மக்கள் சமூகத்தின் மீது பரப்பிய லேனா, தன் பெற்றோர் குழந்தைகளோடு, ஆப்பிரிக்க நாடான காங்கோவிற்கு புறப்பட்டபோது லேனா மட்டும் அய்ரோப்பாவிலேயே தங்கிவிட முடிவு செய்தார்.

ரோம் நகரின் புகழ்பெற்ற ஸ்பானீஷ் கான்வெண்ட்-இல் தன்னுடைய மேல்நிலைக் கல்வியைக் கற்றுத்தேறிய லேனா தனது இயற்பெயரை மாற்றி எலினா என்கிற அழகிய பெயரைச் சூட்டிக் கொண்டார்.

"இருளகற்றும் நந்தா விளக்கு" என்று தமிழ்படுத்திப் பார்த்தால் 'எலினா' என்ற பெயர்ச் சொல்லுக்குக் காரணம் புரியும். ஏதோ அழகாக இருக்கிறது என்றல்ல, ஸ்பானீஷ் மொழியில் "ஒளிரும் விளக்கு" என்றும், கிரீஷ் மொழியில் "நிலவொளி" என்றும் பொருள்படும் "எலினா" எனும் பெயரை ஏற்றுக் கொண்ட லேனா. லா சபையன்சா பல்கலைக்கழகத்தில் "கலாச்சாரங்களின் தத்துவம்" எனும் மானுட வாழ்வியலை ஆய்வு செய்திடும் கல்வியில் முதல் வகுப்பில் தேறினார்.

தன்னுடைய நாற்பதாவது வயதில் அய்ரோப்பிய, அமெரிக்க நாடுகளில் வங்கி-நிதித்துறை பணிகளிலும் பங்குப் பரிவர்த்தனை நிறுவனப் பணிகளிலும் கொடி கட்டிப் பறந்த எலினாவின் வாழ்வில் பல்வேறு தருணங்கள் பல்வேறு பார்வைகளை சிந்தனைகளை ஏற்படுத்தின.

அவற்றும் மிகவும் இனிமையானது, என்றென்றும் எலினாவின் இதயத்தில் பட்டாம்பூச்சியாய் சிறகடிப்பதுமான ஒரு தருணம் நேர்ந்தது என்றால், அது 'ஆல்பிரடோ கியூமோ' எனும் அழகியல்வாதியைச் சந்தித்ததுதான்.

இத்தாலியில் பிறந்து, அமெரிக்க நாட்டில் கல்வியறிவைக் கற்ற 'கியூமோ' ஒரு புகைப்படக் கலைஞராக, ஓவியக் கலைஞராக இத்தாலிய திரைவானில் வெற்றிகரமான புகழ் மகுடத்தைத் தாங்கி நின்றார்.



திருமதி.எலினா கியூமோவுடன் இந்திய பிரதிநிதி திரு.சார்லஸ்.

இந்தப் பூமிப் பந்தெங்கும் வலம் வரவேண்டும் அனைத்து மனித குலத்தின் ஆத்மார்ந்த வாழ்வியலை, வாழ்க்கை நடைமுறையை, அவர்களது பழக்க வழக்கங்களை, பண்பாடுகளை அறியவேண்டும் என்கிற ஆவல் மிகக் கொண்ட அந்த மானுடக் கலைஞனும், எலினாவும் வாழ்வில் இணைந்தது இயற்கையின் கொடையன்றி வேறென்ன?

ஆசிய நாடுகளின் மக்கள் வாழ்வை அறிந்திட எலினா-கியூமோ இணையர் புறப்பட்டனர். அவர்கள் அய்ரோப்பிய மண்ணிலிருந்து கிளம்பும்போது நிச்சயம் அறிந்திருக்க மாட்டார்கள், இந்தப் பயணம் தங்கள் வாழ்வியல் இலட்சியங்களுக்கு புதிய பாதை போடப் போகிறது என்று.

அது 1999 ஆம் ஆண்டு, 20ஆம் நூற்றாண்டின் கடைசி என்றோ, புதிய நூற்றாண்டின் நுழைவாயில் என்றோ பல பெருமைகள் 1999ஆம் ஆண்டிற்கு உண்டென்றாலுங்கூட, அந்த ஆண்டு எலினா-கியூமோ இணையர் வாழ்வில் அவர்களது வாழ்நாள் குறிக்கோளுக்கு அடிக்கல் நாட்டியது என்கிற சிறப்புதான் 1999-இன் பெருமை.

சென்னைக்கு அருகில் கோவளம் எனும் அழகிய கடற்கரைப் பகுதியில் தங்கிய எலினா-கியூமோ இணையர் ஒரு மாலை வேளையில் நடைபயிற்சி மேற்கொண்டபோதுதான் அவர்களது



சாந்தோம் கதீட்ரல் இலவச ஆரம்ப பள்ளி.


மாணவியர்கள் விடுதி.

மனதில் சில கீறல்கள் வலியை ஏற்படுத்தின.

பலதரப்பட்ட மக்களின் வாழ்க்கை முறைகளை, அவர்களது பண்பாட்டை, கலாச்சாரத்தை எல்லாம் படித்தபோதும், ஆராய்ந்தபோதும் எலினாவிற்கு ஏற்பட்டிராத வலி,

தான் கண்ணால் கண்ட வாழ்க்கைப் படிமங்களை எல்லாம் தன் புகைப்படக் கருவியிலே அவற்றைப் பதிந்து ஒளிப்படக் கவிதையாய் புத்தகம் கட்டியபோது கியூமோவிற்கு ஏற்பட்டிராத ஒரு வலி, இனம்புரியாத வலி அன்று கோவளம் கிராமத்தில் ஏற்பட்டது.


எலினா கியூமோவுடன் பெண் கல்வி திட்டம் மூலம் பயன்பெறும் முதல் மாணவி ஷபானா ஆஸ்மின். (ஏரோநாடிகல் அறிவியல்)

வனாந்தரத்திலே இருக்கிற மலர்களைப் போல, சாலமோன் ராஜாவைப் போல இந்த மக்கள் மலர்ச்சியான வாழ்வு வாழ்வார்கள் என்று கட்டியங்கூறிய தேவகுமாரனின் ஆலயத்திற்கு அருகிலேயே, வனாந்தரத் தின் கட்டாந்தரையில் சருகாய் உதிர்ந்து வாடிக்கிடக்கும் மலர்களைப் போல அடிப்படை வசதிகள் ஏதுமின்றி முதுமையின் சுமை தாங்கிகளாய் ஒரு முதியோர் இல்லத்தில் தரையில் கிடந்த இந்த நாட்டின் “சீனியர் சிட்டிசன்”களைப் பார்த்து எலினா-கியூமோ இணையர் அதிர்ந்து போனார்கள்.

“வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய” வள்ளலாரின் மண்ணிலே பிறந்த நாமெல்லாம் இதுபோன்ற துயரைக் கண்டு வருந்துவோம்! வேண்டுமானால் அவர்களுக்காக ரெண்டு வார்த்தைகள் செலவிடுவோம்! அவ்வளவுதான். ஆனால், இந்த அய்ரோப்பிய இணையர் இந்தத் துயர்துடைக்க என்ன செய்யலாம் என சிந்தித்தனர்.

அங்கேயே ஒரு பள்ளிக்கூடம் எனும் பழைய கட்டடத்தையும் கண்டனர். அங்கிருந்த சிறுவர்களின் அவல நிலையையும் கண்டனர். அதிர்ந்து போனார்கள். ஒரு நிமிடம் அவர்களது மேல் இமையின் கீழாக, அவர்கள் கல்வி கற்ற ரோம் நகரத்துப் பள்ளிகளும், பளபளக்கும் பல்கலைக் கழகங்களும் வந்து போயிருக்க வேண்டும்.

இந்த மக்களின் இழி நிலை துடைக்க என்ன செய்வது? என்ற அந்தச் சிந்தனையின் விளைவுதான் “கியூமோ பவுண்டேசன்” பிறக்கக் காரணமானது. இது மனிதாபிமானத்தின் அடையாளம். மனிதநேயத்தின் செயல் வடிவம்.

கோவளம், சென்டிவாக்கம், சென்னை சாந்தோம், நுங்கம்பாக்கம், திருத்தணிக்கு அருகில் கேஜி கண்டிகை என்று தமிழநாட்டின் வட எல்லையில் சுமார் 5000க்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வி-எதிர்கால நலனைப் பாதுகாக்கும் பெரும்பணியைச் சுமக்கிறது கியூமோ பவுண்டேசன்.

குழந்தைக்கல்வி, உயர்கல்வி, தொழிற்கல்வி, பெண்கல்வி என்று கியூமோ பவுண்டேசன் இந்தச் சமூகத்தின் அடிக்கட்டுமானத்தை வலுப்படுத்தும் பலமான பணியை மேம்போட்டுக் கொண்டு செயலாற்றி வருகிறது.

இவையன்றி ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட பத்து நாடுகளிலும் அவர்களது பணி பரவியிருக்கிறது. அய்ரோப்பாவிலேயே பிறந்து, அமெரிக்காவில் கல்வி கற்று உலகளாவிய மக்களின் வாழ்வியலை ஆய்ந்து


கியூமோ கல்வி திட்டம் வழி பயனடைந்த மாணவ-மாணவியர்.


செல்வன் ரோஷனுக்கு செயற்கை கால் பொருத்தப்படுகிறது.



மாணவர் விடுதி - கே.ஜி.கண்டிகை.



புது பள்ளிக்கூடம் - மாம்பாக்கம்.

## திரு.சார்லஸ் அவர்களைப் பற்றி...

ஒரு தலைமுறையில் ஒருவருக்கு வழங்கப்படும் கல்வியானது அதன் பின் ஏழு தலைமுறையைக் காப்பாற்றும் என்றார் வள்ளுவர்.

கல்வியின் தேவையை, கற்பித்தலின் முக்கியத்துவத்தைப் பற்றி இதை விடவும் வேறுயாரும் எவ்வடிவத்திலும் கூறிவிட முடியாது.

இந்தச் சமூகத்திற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று யாராவது பச்சைத்தமிழர் காமராசரிடம் பேசினால்."எதற்கு ஏதாவது செய்யணும்னு நெனைக்கற, உங்க ஊர்ல பள்ளிக்கூடம் இருக்குதா?" என்று கேட்பாராம். கேட்டுவிட்டு, "நான் அதிகாரிகளை அனுப்பறேன். ஒரு பள்ளிக்கூடம் கட்டறதுக்கு உன்னால என்ன முடியுமோ செய்! மத்ததை அரசாங்கம் பார்த்துக்கும். கல்வி கொடு! அவன் தலைமுறை தலைமுறைக்கும் உன்னை நினைப்பானே!" என்று சொல்லி, வந்தவர் மூலம் இந்த நாட்டின் ஏதாவது ஒரு மூலையில் ஒரு பள்ளிக்கூடத்தைக் கட்டி விடுவாராம்.



காமராசர் மறைந்திருக்கலாம். இந்த நாட்டில் காமராசரின் எண்ணங்கள், சிந்தனைகள் ஆங்காங்கே வேர்விட்டு கிளை பரப்பி நிற்கின்றன என்பதற்கு அடையாளமாக, தத்துவ இயலும், ஆங்கில இலக்கணமும், வணிக மேலாண்மையும் படித்த ஒரு பட்டதாரி இளைஞர் தனது அறிவையும் ஆற்றலையும் தனது வருவாய்க்கான வழித்தடமாக விரும்பாமல், தனது சமூக அக்கறைக்கான, மனிதப் பற்றுக்கான வடிகாலாக்க, காமராசரின் கனவுகளுக்கு வண்ணம் தீட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் ஓர் இளைஞர்.

புதுகை மாவட்டம் திருமயம் கிராமத்தில் பிறந்து, கல்வியின் உயர் படிகளில் உச்சம் தொட்டபின், இந்த சமூகத்தின் மீது கொண்ட பற்றின் காரணமாக, கடந்த பத்தாண்டு காலமாய் கியூமோ பவுண்டேசனின் இந்திய பிரதிநிதியாக செயலாற்றி வருகிறார் திரு.சார்லஸ்.

இந்த சமூகத்தின் முகவரியைப் பாதுகாக்க, முகத்தைத் திருத்தி அழகாக்க நம் முன் உள்ள ஒரே வேளைத்திட்டம் கல்விப் பணிதான் என்கிற உயர் எண்ணத்தில் செயல்படுகிறார் சார்லஸ் அவர்கள்.

அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்திடும் பணியில் தன்னை முழுமையாய் அர்ப்பணித்துக் கொண்ட ஓர் அழகியல்வாதியை, ஒளி ஓவியனை, ஓவியக் கலைஞனை 2009ஆம் ஆண்டில் இயற்கை எடுத்துக் கொண்டது. தனது நெடிய இலட்சியப் பயணத்தை கியூமோ முடித்துக் கொண்டதும், தனது கருத்தொத்த காதலனை, சக பயணத் தோழனை, ஒரு இலட்சிய இணையை எலினா இழந்ததுமான சோகத்தை "ஒளிரும் தேவதை" எலினா எதிர்கொண்ட நிகழ்வுதான் நமக்கெல்லாம் ஒரு படிப்பினை.

ஆம், "கியூமோ பவுண்டேசனின் உயிர்ப்பை, தேவையை என் சுவாசக் காலம் வரையும் பாதுகாப்பேன்" என்று எலினா உறுதியேற்றுக் கொண்டார். "என் தோழன் கியூமோவின் கனவுகளை நான் என் கண்களுக்குள் அடைகாப்பேன். அவர் கனவுகள் நனவாகிட என் வாழ்நாளைச் செலவிடப் போகிறேன்" என்ற அந்த தெளிந்த நெஞ்சுறுதியை, தூய தொண்டுள்ளத்தை என்ன சொல்லி வாழ்த்தினாலும் தகும் என்றாலும் ஒன்றைச் சொல்லி இதை நிறைவு செய்யலாம்.

எலினா எனும் நந்தா விளக்கை மானுட வாழ்வின் இருள் அகற்றும் பெரும் பணிக்கு என்றும் என்றென்றும் ஏந்தி நிற்போம்! நன்றியோடு!!

**-அகில் காவிரி**



மாணவ-மாணவியர் விடுதி
சென்டிவாக்கம்.





மாணவர் விடுதி
கோவளம்.